1978 மார்ச் 15]

சபைகளிலும் திருத்தம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. 1976 மார்ச் திங்களில் சட்டமாக ஆக்கப்பட்டது. பின்னல் 1976 மார்ச் திங்களில் இது வெளியிடப்பட்டது. பின்னல் இதன் மீது ரிட் மனுக்கள் தாக்கப்பட்டன. அவை இப்போது உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளன.

தமிழ் நாட்டுக்குக் கேரளத்திலிருந்து தண்ணீர்.

*568—வின. திரு. வி.கே. கோதண்டராமன்
திரு. எஸ்.ஜே. இராமசாமி
திரு. எஸ்.ஜே. சாதிக்பாட்சா

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1977 செப்டம்பர் 23, 24 தேதிகளில் கேரளத் தண்ணீர் விஷயமாக பிரதம மந்திரி முன்னிலையில் கேரள முதல் அமைச்சரும் தமிழ்நாடு முதல் அமைச்சரும் பேச்சு வார்த்தை நடத்தினர்களா ?

(ஆ) அதன் முடிவு யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ் நாடு கேரள மாநிலங்களுக்கு இடையே ஏற்கெனவே ஏற்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு உட்படாத மேற்கு நோக்கி பாயும் நதிகளை திசை திருப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை, மத்திய அரசால் நியமிக்கப்பட்ட தொழில் நுட்ப குழு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று முடிவாகியுள்ளது.

*569—வின. திரு. என். கிட்டப்பா :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் : கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கேரள மேற்குப் பகுதி தண்ணீரை தமிழ் நாட்டுக்கு கொண்டு வருவது குறித்து, கேரளா, தமிழ்நாடு, மத்திய அரசு பொறியாளர்கள் கூடிப்பேசினர்களா ?

(ஆ) ஆம் எனில், விபரம் யாது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) இல்லை.

(ஆ) இவ்வினவுக்கு இடமில்லை.